

நான் அதிகாலையில்
விழிப்பேன்
I Will Awake the Dawn
Album 26 Song 6



























நான் அதிகாலையில் விழிப்பேன்

Fri
DATE 04 05 2007

108 சங்கீதம்

நான் அதிகாலையில் விழிப்பேன்
உம்மைப்பாடி கீர்த்தனம் பண்ணுவேன்
வீணையே சுரமண்டலமே
விழியுங்கள் நீங்கள் விழியுங்கள்

கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே
உம்மையே என்றும் துதிப்பேன்
ஜாதிகளுக்குள்ளே
உம்மையே போற்றிப் பாடுவேன்

உம் கிருபை வானங்களுக்கு மேலே
உம்மையே என்றும் துதிப்பேன்
உம் சத்தியம் மேகமண்டலம் எட்டுதே
உம்மையே போற்றிப் பாடுவேன்


உம் பிரியர் விடுவிக்கப்படும்பொழுது
உம்மையே என்றும் துதிப்பேன்
வலக்கரத்தினால் இரட்சிக்கும் போது
உம்மையே போற்றிப் பாடுவேன்

உமது பரிசுத்தத்தை விளம்பும் போது
உம்மையே என்றும் துதிப்பேன்
என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது
என் மகிமையும் உம்மைப் பாடும்

சீகேமைப் பங்கிட்டு
சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்துகொள்வேன்







DATE

கீலேயாத் மனாசே என்னுடையது
எப்பிராயீம் என் தலையின் பெலன்

யூதா எனது நியாயப்பிரமாணிகன்
மோவாபோ எனது பாதபாத்திரம்
ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்திடுவேன்
பெலிஸ்தியாவின் மேல் ஆர்ப்பரிப்பேன்

அரணான பட்டணத்திற்குள்ளே
என்னை நடத்திக்கொண்டு போகிறவர் யார்?
ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?
எங்கள் சேனைகளின் கர்த்தர் நீரல்லவா !?

எங்களுக்கு உமது உதவி போதுமே
மனுஷனுடைய உதவி வேண்டாம்
தேவனாலே பராக்கிரமஞ்செய்வோம்
கர்த்தரே சத்துருக்களை மிதித்துப் போடுவார்



